# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 42 — 1973 ජනවාරි 12 වැනි සිකුරාදා — 1973.01.12

42 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 21 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்*.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்*.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்*.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கெனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்*.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறு

---

**முக்கிய அறிவித்தல்**

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ டிசெம்பர் மீ 15 ந் உ.

---

வதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

இல. வெ. மு/4/144

## கல்வி அமைச்சு

### இந்திய அரசாங்கம் வழங்கும் பொது கலாச்சாரப் புலமைச் பரிசில்கள்—1973 ஆம் ஆண்டு

பட்டப்பின் படிப்பு மட்டத்தில் அல்லது பட்டப் படிப்பு மட்டத்திலான படிப்புகளுக்கு பொது கலாச்சாரப் புலமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் 1973 ஆம் ஆண்டுக்கு இந்திய அரசாங்கம் வழங்கும் புலமைப் பரிசில்களை அளித்தற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப்பின் படிப்பு மட்டத்திலான படிப்பு தொடர்பாக கற்கைத் துறைகளில் எவ்வித மட்டுப்பாடுமில்லை, ஆனால் பட்டப் படிப்பு மட்டத்திலான படிப்பு தொடர்பாக பின்வரும் கற்கைத் துறைகளுக்கு மட்டுமே விண்ணப்பங்கள் அனுப்பப்படலாம் :—

வகுதி "அ" — 1. கட்டடக்கலை
2. எந்திரவியல்

வகுதி "ஆ" — 1. விவசாயம்
2. உணவுத் தொழில் நுட்பவியல்
3. வனவியல்
4. பிடவைத் தொழில் நுட்பவியல்
5. மருந்துப் பாகவியல்
6. மனையியல்

வகுதி "இ" — 1. மருத்துவம்
2. பல் மருத்துவம்
3. விலங்கு மருத்துவம்

வகுதி "ஈ" — 1. சங்கீதம்
2. நடனம்
3. சமூகாபிவிருத்தியும் கிராமிய அபிவிருத்தியும்.

தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணிசெய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பட்டப் படிப்பு மட்டத்திலான புலமைப் பரிசில்களுக்கு பின்வருவோரிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா :—

(அ) நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களுக்கும் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவருமான அரசாங்க ஊழியர்கள்.

(ஆ) சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் நிரந்தர நியமனங்களை வகிப்பவர்களும் அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டலர்களுமானவர்கள்.

(இ) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் யாதேனும் பல்கலைக் கழகத்தில் ஒரு பயிற்சி நெறியைப் பின்பற்றுவவர்கள்.

குறிப்பு : (1) புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்திற்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(2) சபைகள் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. காலை எல்லை.—புலமைப் பரிசில்களின் செல்லுபடி காலம் தெரிவு செய்யப்படும் பயிற்சி நெறியைப் பொறுத்ததாகும். பட்டப்பின் படிப்புப் புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 2 வருடகால அளவினதாகவும் பட்டப்படிப்புப் புலமைப் பரிசில்கள் 4—6 வருடகால அளவினதாகவும் இருக்கும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு இந்திய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) பட்டப்பின் படிப்பு மட்டத்திலான புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் 1.6.73 அன்று 25 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும். எனினும், 20—22 வயதுத் தொகுதியில் அடங்குபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பட்டப்படிப்பு மட்டத்திலான புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் 1.6.73 அன்று 20 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருக்க வேண்டும்.

(iii) பட்டப்பின் படிப்பு மட்டத்திலான புலமைப் பரிசில்கள் தொடர்பில் மேற்கொள்ளவிரும்பும் பயிற்சி நெறிக்குப் பொருத்தமான பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் 2 ஆம் வகுப்புப் பட்டத்தை, குறைந்தபட்சம் பெற்றிருக்க வேண்டும்.

(iv) பட்டப்படிப்பு மட்டத்திலான புலமைப் பரிசில்களைப் பொறுத்த வரையில்—

(அ) "அ" வகுதியில் அடங்கும் ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்—க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சைக்கு 2 தடவைகளுக்கு மேற்படாது தோற்றி குறைந்தபட்சம் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருப்பதுடன் பின்வரும் சித்திகளையும் பெற்றிருக்க வேண்டும் :—

1. கணிதத்தில் (தூய அல்லது பிரயோக அல்லது உயர்தர கணிதத்தில்) திறமைச் சித்தி ;
2. பௌதிகத்தில் திறமைச் சித்தி ;
3. இரசாயனவியல், ஆங்கில மொழி ஆகியவற்றுள் ஒன்றில் திறமைச் சித்தியும் மற்றதில் சாதாரண சித்தியும் ; அல்லது
4. இந்தியாவில் அங்கீகரிக்கப்படும் சமமான யாதேனும் ஒரு பரீட்சையில் சிறந்த தரத்தய சித்தி.

(ஆ) "ஆ" வகுதியில் அடங்கும் ஒரு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவராயின்—க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சைக்கு 2 தடவைகளுக்கு மேற்படாது தோற்றி 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் பின்வரும் சித்திகளையும் பெற்றிருக்க வேண்டும்.

1. உயிரியல் அல்லது தாவரவியலிலும் விலங்கியலிலும்/பௌதிகவியலிலும் திறமைச் சித்திகள்.
2. இரசாயனத்தில் திறமைச் சித்தி.
3. பௌதிகவியல், கணிதம் (தூய, பிரயோக அல்லது உயர்தர கணிதம்) ஆகியவற்றுள் ஒன்றில் திறமைச் சித்தியும் மற்றதில் சாதாரண சித்தியும் ;
4. ஆங்கில மொழியில் சித்தி ; அல்லது இந்தியாவில் அங்கீகரிக்கப்படும் சமமான யாதேனும் ஒரு பரீட்சையில் சிறந்த தரத்தய சித்தி.

(இ) "இ" வகுதிக்கு விண்ணப்பிப்பவராயின்—க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் ஒரே தோற்றத்தில் இரசாயனவியலிலும் கீழே கொடுபட்டுள்ளவற்றில் இரண்டு பாடங்களும் உட்பட மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்—தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல் அல்லது இந்தியாவில் அங்கீகரிக்கப்படும் சமமான யாதேனும் ஒரு பரீட்சையில் சிறந்த தரத்தய சித்தி.

(ஈ) "ஈ" வகுதிக்கு விண்ணப்பிப்பவராயின்—பின்வரும் சித்திகளையும் சேர்த்துக் குறைந்தபட்சம் 6 பாடங்களிலாவது இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில், க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

1. சிங்கள/தமிழ் பாஷையில் திறமைச் சித்தி.
2. விண்ணப்பிப்பது சங்கீதத்திற்காகவெனின்—க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி அல்லது சமமான பரீட்சையில் அல்லது உயர்தர வேறு பரீட்சையில் பெற்ற சித்தி.

விண்ணப்பிப்பது நடனத்துக்காகவெனின்—அரசினரின் சங்கீத நடனப் பரீட்சையின் "இன்டர் மீடியட்" தராதரப்பத்திரம்/லங்கா காந்தர்வ சபா தராதரப்பத்திரம் அல்லது சமமான அல்லது உயர் தராதரப்பத்திரம்.

விண்ணப்பிப்பது சமூகாபிவிருத்திக்கும் கிராமிய அபிவிருத்திக்குமாகவெனின்—புவியியல், குடியியல் எனும் பாடங்கள் இரண்டினுள் ஒன்றில் திறமைச் சித்தியும், மற்றதில் சாதாரண சித்தியும் பெற்றதற்கான சான்றுகளுடன் சமூக சேவையில் அல்லது பொது நலப்பணியில் ஈடுபட்டுள்ளவர் என்பதை நிரூபித்தற்கான இரண்டு அத்தாட்சிகள்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.6.1973 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15(ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள் : இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) ஒவ்வொரு மாணவனும் கட்டாயம் கொடுக்க வேண்டிய கற்கைக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் ஆகியவை.

(ஆ) கலாநிதி, மருத்துவ, எந்திரவியல் பயிற்சி நெறிகளுக்கு வருடாந்தம் ரூ. 300 ஆகிய வரையறைக்குள் பயிற்சி நெறிக்கு வேண்டிய புத்தகங்கள், கருவிகள் ; ஏனைய பயிற்சி நெறிகளுக்கு வருடாந்தம் ரூ. 200.

(இ) புலமைப் பரிசில் பெற்ற மாணவன் இந்தியாவிலிருந்து வெளியேறுமுன் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தால், மேல் உள்ள (ஆ) ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தொகைக்குள் அடங்குவதற்கமைய ஆராய்ச்சிக் கட்டுரைக்கு விதிக்கப்பட்ட விகிதங்களின் பிரகாரம் தட்டெழுத்துச் செலவு.

(ஈ) பயிற்சி நெறிக்கு அவசியமென அத்தாட்சிப்படுத்தப்படும் கற்கைச் சுற்றுலாக்களுக்கு, விதிக்கப்பட்ட விகிதங்களுக்கமைய கற்கைச் சுற்றுலாச் செலவுகள்.

(உ) உணவு, விடுதி, உடை, சிறு வியாதிகள், சொந்தச் செலவு ஆகியவற்றுக்கு பராமரிப்புச் செலவாக மாதாந்தம் ரூ. 300.

(ஊ) வைத்திய உத்தியோகத்தரின் அல்லது நிலையத் தலைவரின் ஆலோசனைக்கிணங்க செய்யப்படும் சிகிச்சைக்கான சகல செலவுகளும்.

(எ) இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை அல்லது வாலிபர் பாசறைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட விகிதங்களுக்கிணங்க பிரயாணச் செலவுகளும் நாளாந்தச் சகாயப் படிகளும் ;

(ஏ) அறிமுகப் பயிற்சி நெறிகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு, விதிக்கப்பட்ட விகிதங்களுக்கிணங்க, பிரயாணச் செலவு.

மு.கு. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களே இந்தியாவுக்குப் போய்வரும் செலவைப் பொறுக்க வேண்டும்.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியாபகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. நேர்முகப் பரீட்சை.—தகவுடைய அபேட்சகர்கள் தொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப்

பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், இந்தியாவிற்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது நிர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆகியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இந்தியாவில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேறவேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்டபின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகத்திற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் **1973.01.26 ஆந் திகதியன்று** அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1972.12.29.

1-401—12 01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

## ஆயுள்வேத திணைக்களம்

### மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் (சாதாரணம்)

### ஆயுள்வேத வைத்தியசாலைகள்

ஆயுள்வேத திணைக்கள ஆயுள்வேத வைத்தியசாலைகளில் (சாதாரணதர) மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காட்டப்படும் மாதிரிப் படிவங்களில் எழுதப்பட்டு 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ம் திகதிக்கு முன்னர் ஆயுள்வேத ஆணையாளர் கொழும்பு 8 என்ற முகவரியில் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம் :

இப்பதவிக்குரிய சம்பளம் பின்வருமாறு ஆண்டொன்றுக்கு ரூபா 5,736—6×144, 8×180 உடன் 6×240 ரூபா 9,480 வருடத்துக்கு ரூபா 6,780, ரூபா 7,500 ரூபா 8,280 க்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

வினைத்திறமைகாண் தடைகள் :

(i) சேவையில் உறுதிப்படுத்தப்படுமுன்னர் இவ் உத்தியோகத்தர் நிதிப்பிரமாணங்கள் நிர்வாகப் பிரமாணங்கள் அரசாங்கசேவை ஆணைக்குழு விதிகள் வைத்தியசாலைகளின் நிர்வாகம் பற்றிய பிரமாணங்கள் ஆகியவற்றில் நடாத்தப்படும் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்தியடைய வேண்டும்.

(ii) ரூபா 6,780 க்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர் இவ்வுத்தியோகஸ்தர் இரண்டாம் மொழி ஒன்றில் அமையும் தேர்ச்சிப் பரீட்சையொன்றில் சித்திபெறுதல் வேண்டும்.

(iii) 7,500 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர் இவ்வுத்தியோகத்தர் ஆயுள்வேத மருத்துவமுறை பற்றிய பின்வரும் பாடங்களுள் எவை இரண்டிலேனும் நடாத்தப்படும் திணைக்களப் பரீட்சையொன்றில் சித்திபெறுதல் வேண்டும். இப்பரீட்சையொன்றில் சித்திபெறுதல் வேண்டும். இப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடங்கள் பற்றி ஆயுள்வேத ஆணையாளர் முடிவு செய்வார்—

1. தடுப்புமுறைச் சுகாதாரமும் துப்புரவு முறைகளும்.
2. பஞ்சகரும சிகிச்சை,
3. போசனை,
4. குழந்தை வைத்தியம்,
5. நாடித்துடிப்பின்மூலம் நோய்வகை அறிதல்,
6. பல் மருத்துவம்,
7. உள்நோய்களும் பிறவும்.

1. 8,280 ரூபாவுக்கு அப்பால் பதவி உயர்வு பெறுமுன்னர் இவ் உத்தியோகத்தர் தொடக்க ஆராய்ச்சியில் தகைமைபெற்றவராகவோ ஆயுள்வேத தொடர்பான நூல்கள் அல்லது கட்டுரைகள் அல்லது இரண்டையும் வெளியிடுவதில் போதியளவு புகழ்பெற்றவராகவோ அல்லது பட்டத்திற்குப் பிந்திய உயர்தகைமைகள் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்:—

(i) இப்பதவிகள் நிரந்தரமானது. அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுபவர் சொந்த மருத்துவத் தொழில் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்.

4. கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும் :—

ஒவ்வொரு அபேட்சகரும் தான்

(i) சிறந்த நன்னடைத்தையும் தேகாரோக்கியம் உடையவரென் றும்

(ii) 1973.02.09 ஆந் திகதியில் 23 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும் (அர சாங்க சேவையிலுள்ளவருக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது).

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத நிலையமொன்றில் "டிப்பிளோமா" பெற்றவராயும் ஆயுள்வேத வைத்திய சாலை ஒன்றில் திருப்தியான ஒருவருடப் பயிற்சி முடித்த வரென்றும் அல்லது 5 வருடங்கட்கு மேல் வைத்தியத் தொழில் புரிந்தவரென்றும்

அல்லது

(ஆ) பத்துவருடம் ஆயுள்வேத வைத்தியம் திருப்திகர மாகச் செய்தார் எனச் சான்றிதழ் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் யாவரும் பின்வரும் சான்றிதழ்களின் பிரதி களை (மூலப் பிரதிகள் அல்ல) தங்களது விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (ஞானஸ்னானப் பத்திரங்கள் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணங் கட்கமைய வழங்கிய பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)

(ஆ) உயர்தொழிற் கல்வி மிகக் கூடிய கல்வித் தகைமைகள்

(இ) அண்மையில் பெறப்பட்ட நன்னடத்தை பற்றிய சான்றி தல்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கட்கு இது கேட்கப்படமாட்டாது)

குறிப்பு :—விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்ட சாதனங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டாது. இந்த வர்த்தமானியின் I ம் பகுதி II ம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவையிலுள்ள நியமனங்களுக்குப் பொருத்த மான நிபந்தனைகள் இப்பதவிக்கும் பொருத்தமுடைய தாக அமையும்.

டபிள்யு. பி. வேவேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொழும்பு 8,
27, டிசம்பர் 1972.

(மாதிரிப் படிவம்)
ஆயுள்வேத திணைக்களம்
மருத்துவ உத்தியோகஸ்தர் பதவிகள் (சாதாரணநேரம்)
ஆயுள்வேத வைத்தியசாலைகள்

1. முழுப்பெயர் :—
(பெரிய எழுத்துக்களில்)
(அ) முதற்பெயர் :————.
(ஆ) பிறபெயர்கள் .————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
1973.02.09 ல் சரியான வயது :————.
ஆண்டுகள்...............மாதங்கள்...............நாட்கள்.

4. இலங்கையரா ? அல்லாதவரா ?...............
வம்சாவழி காரணமாகவா பதிவுகாரணமாகவா ?...........

5. பெறப்பட்ட உயர் கல்வித் தகைமைகள் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

6. விண்ணப்பகாரர் டிப்பிளோமா பட்டமுடையவராயின் உயர் தொழிற்றகைமைகள் குறிப்பிடுக :————.
(i) டிப்பிளோமா பட்ட பெயர் :————.
(ii) டிப்ளோமா பெற்ற ஆண்டு :————.
(iii) வகுப்பு :————.
(iv) நிலையம் :————.

7. பதிவுசெய்யப்பட்ட வைத்தியராயின் பதிவு இலக்கமும் ஆண்டும் :————.

8. சொந்தமருத்துவச் செய்கையிலுள்ள அனுபவம் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

9. அரசாங்க சேவையில் உள்ளவராயின் பதவிப் பெயர் நியம னத் திகதி பதவியிலிருந்து விலகிய திகதியும் காரண மும் :————.

10. குறிப்புகள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலுள்ள விபரங்கள் எவையும் பொய் யானவை அல்லது பிழையானவை என தெரிவு செய்யப்படமுன் னர் கண்டுபிடிக்கப்படின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமனத்திற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்படின் எதுவித நஷ்ட ஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் ஆளாவே னென்பதனையும் நான் அறிவேன்.

..............................
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :..............................

1-395—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42.

---

ஸ்ரீ லங்கா அரச வியாபார (புடவை) கூட்டுத்தாபனம்
சலு சல

ரகக் கட்டுப்பாட்டாளர் பதவி (புடைவை)

மேற்கூறப்பட்ட பதவிக்கு ஸ்ரீ லங்கா பிரஜைகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள் :

கல்வி.—இரசாயனம் அல்லது பௌதிகம் அல்லது இரட்டைக் கணிதம் உட்பட விஞ்ஞானவியல் மணி பட்டம்; அல்லது விண்ணப்பதாரிகள் பின்வரும் உயர்தொழில் தகைமைகளுள் ஒன்றை அல்லது பலவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) இங்கிலாந்தின் புடைவை நிலையத்தின் பங்காளியாயிருத் தல் வேண்டும் ; அல்லது

(ஆ) மூன்று வருட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புடைவை மணி பட்டம் பெற்ற வராயிருத்தல் வேண்டும் ; அல்லது

(இ) 6 வருட அனுபவத்துடன் வி. ஜே. ரி. ஐ. அல்லது அதற் குச் சமமான டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவராயிருத் தல் வேண்டும் ;

(ஈ) புடைவை சந்தைப்படுத்துதலில் அறிவையும் அனுப வத்தையும் அல்லது இரண்டிலொன்றைக் கொண்டிருத் தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

வயது.—1973 ஜனவரி 25 ஆந் திகதியின் போது 30 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம்.—ரூபா 900—7 × 50—ரூபா 1,250 மாதமொன்றிற்கு (எல்லாம் உட்பட) மேலதிகத் தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ளவர்கள் மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான இடத்தில் வைக்கப்படுவார் கள்.

விண்ணப்பதாரிகள் தமது வயது, கல்வி, உயர் தொழில் தகை மைகள், பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து வகித்த தொழில் அனுபவம் ஆகியவற்றைப் பற்றிய முழு விபரங்களையும் தருவ துடன் சான்றிதழ்கள், நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளை யும் (மூலப் பிரதிகளல்ல) மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏற்கனவே அரசாங்க சேவை, அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப் பங்களை முறையே தத்தம் தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் 1956 இன் 33 ஆம் இல. அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் விதிகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 1973 ஜனவரி 25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்.

ஸ்ரீ லங்கா அரச வியாபார (புடைவை)
கூட்டுத்தாபனம்—சலுசல,
93, ஜாவத்த ரோட்,
கொழும்பு 5.

1-404—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42.

### கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு (ரத்மலானை மேற்கு) பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

இரத்மலானை மேற்கு பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளரின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலீஸ் ஸ்தாபனம், சனசமூக நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும், பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

எம். பி. திசநாயக்க,
மேலதிக மாவட்டப் பதிவாளர்.

கொழும்பு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1973, ஜனவரி 01 ந் திகதி.

1-317—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42.

---

### கொழும்பு மாவட்டத்தின் (தெமட்டகொடை) கொழும்புப் பிரிவிற்கு முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி

கொழும்புப் பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள் விவாகமாகி மனைவியர் உயிருடன் இருக்கும் ஆண் முஸ்லிம்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2. இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இவ்வலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும், நகர் காவலர் அலுவலகங்களிலும், சனசமூக நிலையங்களிலும்; பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத் தாபன நிலையங்களிலும், இப்பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப் பட்டிருக்கும் அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு பெப்பரவரி மாதம் 24 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

எம். பி. திசநாயக்க,
மேலதிக மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 03 ந் திகதி.

1-318—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42.

---

### பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

#### யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் மேற்கு பகுதிக்கான பிறப்பிறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி

யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் மேற்கு பகுதிக்குரிய பிறப்பிறப்பு வைத்தியப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பதிவாளர் தலைமை அதிபதியினால் 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ந் திகதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் யாவும் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் உள்ளபடி தயாரித்து அனுப்பப்பட வேண்டும்.

2. **வேதனம்.**—இப்பதவி வருடாந்தம் ரூபா 5,160 நிலையான திரட்டிய வேதனத்தையுடையது.

3. **செலவுப்படிகள்.**—திருமணமானவர்களுக்கு வழங்கப்படும் செலவுப் படியும் எழுதுவினைஞருக்காக ஓர் செலவுப்படியும் வழங்கப்படும். போக்குவரத்து செலவுக்கென வருடாந்தம் ரூபா 300 வழங்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—(i) இப்பதவி நிரந்தரமானதும், அரசாங்க சேவையாளர் சேமலாப நிதிக்கு உதவுதொகைகள் செலுத்தப்படல் வேண்டியதுமாகும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையில் நியமனம் செய்யப்படுவார்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் அப்பதவிப் பிரிவிற்குள் ஒரு மத்திய இடத்தில் (சாதனங்களோடு) தங்கள் அலுவலகத்தைப் பதிவாளர் தலைமை அதிபதியின் விருப்பத்திற்கேற்ப வைத்திருத்தல் வேண்டும். அலுவலகப்படியின் தொகை நியமனம் செய்தபின் தீர்மானித்து வழங்கப்படும்.

(iv) பொது விடுமுறை தினங்களைத் தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் அலுவலக நேரம் 7 மணி தொடக்கம் 11 மணி வரையும், பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரையும், பொது விடுமுறை தினங்களிலும் ஞாயிறு தினங்களிலும் 7 மணி தொடக்கம் 10 மணி வரையும் 2 மணி தொடக்கம் 4 மணி வரையும் என அலுவலக நேரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

(v) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்; ஆனால் பதிவாளர் அதிபதியின் அனுமதியின்றி இலங்கையிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் அல்லது விவசாய வேலைகளில் அல்லது தொழில் ஸ்தாபனங்களின் விவகாரங்களில் பங்கு பற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார்.

5. **தகவுத் திறன்.**—(i) விண்ணப்பகாரர் இலங்கையராயிருத்தல் வேண்டும். "இலங்கையர்" என்னும் பதம் வம்சாவழியாக அல்லது பதிவின் மூலம் இலங்கையராயிருத்தல் எனப் பொருள்படும்.

(ii) விண்ணப்பங்கள் முடிவடையுந் தினத்தன்று விண்ணப்பகாரர் 25 வயதிற்குக் குறையாதவராயும் அல்லது 50 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு விண்ணப்பக்காரரும்—

(அ) பதிவு செய்யப்பட்ட வைத்தியத் தொழில்புரிபவராக; அல்லது

(ஆ) (106 ம் அத்தியாயமான) சுதேச வைத்தியச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சுதேச வைத்தியராக; அல்லது

(இ) பிறப்பிறப்புப், பதிவுக் கட்டளைச் சட்டம் (110 ம் அத்தியாயம்) பிரிவு 6 (3) ன் கீழ் சௌக்கிய சேவை அதிபரால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றுப் பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

6. **பிற தகைமைகள்.**—(i) விண்ணப்பக்காரர் தாம் இலங்கையரா என்பதைக் கேட்கும் நேரங்களில் திருப்திகரமான ஆதாரங்களால் நிரூபிக்க வேண்டும்;

(ii) அரசாங்க சேவையிலிருக்கும் தகுதியான உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும். ஏற்கெனவே அரசாங்க சேவையில் நிரந்தர உத்தியோகம் பார்ப்பவர்களின் விண்ணப்பங்களை அனுப்பும்போது திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், தற்பொழுதுள்ள பதவியிலிருந்து விடுவிக்க முடியும் அல்லது முடியாது என அரசாங்க கைநூலிலுள்ள நிர்வாகப் பிரமாணம் பிரிவு I (அதிகாரம் V) ன் கீழ் குறிப்பிட வேண்டும்;

(iii) அபேட்சகர் குறிப்பிடப்பட்ட இடத்தில், நேரத்தில், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படலாம்; ஆனால் இது தொடர்பாக எவ்வித போக்குவரத்துச் செலவும் வழங்கப்படமாட்டாது;

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஏற்கனவே அரசாங்க சேவையிலில்லாதவராயிருந்தால், ஒரு வைத்தியப் பரீட்சையில் சித்தியடையுமாறு கேட்கப்படுவார்;

(v) ஒரு அபேட்சகர் அரசாங்கத்திடமிருந்து உபகாரச் சம்பளம் பெறுபவராயிருந்தால் அவர் பெறும் உபகாரச் சம்பளத் தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

(vi) ஒரு அபேட்சகரைச் சிபார்சு செய்ய யாராவது விரும்பினுல் ஒரு நற்சாட்சிப் பத்திரம் வழங்கப்படுவதன் மூலம் அவ்வாறு செய்யலாம்; ஆனுல் ஒரு அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாகப் பிரசாரம் செய்யவோ அல்லது செல்வாக்குத் தேடவோ முற்பட்டால் அவ் அபேட்சகரின் விண்ணப்பம் தகுதியற்றதாக்கப்படும்.

(vii) விண்ணப்பத்திற் தரப்பட்ட தகவல்கள் தேர்ந்தெடுக்கப்படுமுன் பொய்யானவையாக அறிய நேரிட்டால் அவரின் விண்ணப்பம் தகுதியற்றதாக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அறிய நேரிட்டால் அவர் நியமனத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்படுவதற்குப் பாத்திரராவார்;

(viii) இவ் விளம்பரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

(ix) நியமனம் பெற்றவர் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக ஏற்கனவே இயற்றப்பட்டதும், இனிமேல் இயற்றப்படும் எவ்வித விதிகளுக்கும் அமைந்து ஒழுகுமாறு வேண்டப்படுவார்;

(x) நியமனம் பெறுபவர் அரசாங்க வர்த்தமானியின் பகுதி I, பிரிவு II ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவையாளருக்கான ஏனைய சேவை நிபந்தனைகளையும் இது தொடர்பாகப் பார்க்கவும்.

எச். எம். இசட். பாறூக்,
பதிவாளர் தலைமை அதிபதி.

பதிவாளர் தலைமை அதிபதியின் அலுவலகம்,
கொழும்பு 1,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 27 ந் வெ.

**யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் மேற்கு பகுதியின் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்**

1. முழுப் பெயரும் (பெரிய எழுத்துக்களில்) வசிக்குமிடமும்: ———.

2. (அ) வம்சாவழியாகவா/பதிவு மூலமாகவா இலங்கையர்: ———.

(ஆ) பிறந்த இடம்: ———.

3. பிறந்த திகதி: ———.

4. விவாகம் செய்தவரா/செய்யாதவரா: ———.

5. வைத்தியத் தராதரங்கள்: ———
(வைத்தியத் தொழில் புரிபவராகப் பதிவு செய்யப்பட்ட திகதி அல்லது வருடம் அல்லது சௌக்கிய சேவை அதிபரால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றுரைப் பத்திரத்தின் திகதி)

6. பதிவு வேலை சம்பந்தப்பட்ட முன்னைய அனுபவங்கள்: ———.

7. அரசாங்க உபகாரச் சம்பளம் பெறுபவராயிருந்தால் உபகாரச் சம்பளத்தின் தொகையும், தற்போதைய வேலையும்: ———.

8. மொழித் தேர்ச்சித் தராதரம்:
சிங்களம்: ———.
தமிழ்: ———.
ஆங்கிலம்: ———.

9. இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கிய இருவரின் பெயரும் விலாசமும்: ———.

10. விசேட தகைமைகள் (ஏதாவது இருப்பின்): ———.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னுல் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதென்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவதொன்று உண்மையில்லையென்று தேர்ந்தெடுக்கப்படுமுன் அறிய நேரிடின் தகைமை நீக்கம் பெறுவதையும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் உண்மையில்லையென்று அறிய நேரிடின் நியமனத்திலிருந்து பரிகாரமின்றி வேலைநீக்கம் செய்யப்படுவதையும் நான் நன்கு அறிவேன்.

.......................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி: ———.

பி. கு.—தராதரப் பத்திரங்கள் (ஏதாவது இருப்பின்) பிரதிகள் மட்டும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

1-407—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

**உப அஞ்சல் அதிபர் பதவி—"நீர்கொழும்பு கடைவீதி" "பீ" தர உப அஞ்சல் அலுவலகம்**

நீர்கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் திறக்கப்பட்டிருக்கும் நீர்கொழும்பு கடைவீதி "பீ" தர உப அஞ்சல் அலுவலகத்திற்கு உப அஞ்சல் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கு கொடுக்கப்படும் ஆகக் குறைந்த மாதாந்தப் படி ரூபா 50 ஆகும்.

2. விண்ணப்பதாரர்களாகிய இருபாலாரும், இலங்கையராயும் 20.02.1973 ந் திகதியன்று 21 வயதிற்கு மேற்பட்டவர்களாயும் 45 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் மாநகரசபை எல்லைக்குள் 10 வருடங்கள் அல்லது அதற்குக் கூடுதலாக நிரந்தரமாக வசித்தவர்களாய் இருத்தல் வேண்டும். திறக்கப்படவிருக்கும் உப அஞ்சல் அலுவலகத்திற்கு அண்மையில் உள்ள வட்டாரம் அல்லது வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. விண்ணப்பதாரர்கள் சிங்கள மொழி/தமிழ் மொழியுடன் எண்கணிதம்/தூய கணிதம்/வர்த்தக கணிதம்/உயர் கணிதம்/பிரயோக கணிதம்/கணக்கியல் உட்பட குறைந்தது 3 பாடங்களில் சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில்/க. பொ. த. பரீட்சையில் (சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. "நீர்கொழும்பு கடைவீதி" உப அஞ்சல் அலுவலகத்தை அமைப்பதற்கு ஏற்ற ஒரு கட்டடத்தை விண்ணப்பதாரர்கள் வாடகையின்றி அளித்தல் வேண்டும்.

6. கொழும்பு 1, எச்சலன் சதுக்கம், 5 வது கட்டடத்திலுள்ள கொழும்பு வட பிரிவு அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து பெறக்கூடிய அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பங்களைத் தயாரித்து 20.2.1973 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அவரை அடையக் கூடியவாறு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

7. அஞ்சல் அலுவலகங்களின் பெரும்பாக அத்தியட்சரிடமிருந்து மேலும் விபரங்கள் தேவைப்படின் பெற்றுக் கொள்ளலாம்.

சி. ஜே. சேரசிங்க,
பதில் அஞ்சல் அதிபர் நாயகமும்
தொலைத் தொடர்புப் பணிப்பாளரும்.

1-402—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

---

**மாத்தறை மாவட்டம் நாலு கிறவட்ஸ் வட்டார திடீர் மரண மரண பரிசோதகர் பதவி**

மாத்தறை மாவட்டம் நாலு கிறவட்ஸ் வட்டார திடீர் மரண மரண பரிசோதகர் பதவிக்காக மாத்தறை நகர சபை, நாவிமன மாகாவிட கிராம சபை என்னும் உள்ளூராட்சி மன்றங்களுக்குள் நிரந்தர வசிப்பாளர்களிடம் கீழ்க்குறிப்பிடும் தகைமைகள் இருப்பின் விண்ணப்பங்கள் அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றேன். இதற்காக இக்காரியாலயத்தால் அல்லது மாத்தறை வல்லபடபத்துவ மேற்கு சக நாலுகிறவட்ஸ் பிரதேச உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலுலோ விநியோகிக்கப்படும் விண்ணப்பங்களில் கேட்கப்பட்டுள்ள விபரங்களை சரியாக நிரப்பி உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 1973 ஜனவரி மாதம் 25 ந் திகதியோ அதற்கு முன்னராகவோ கீழ்க்குறிப்பிடும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

1. விலாசம்.—அரசாங்க அதிபர், கச்சேரி, மாத்தறை.

2. தகைமை.—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 30 வயதுக்கு குறையாமலும் 60 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்.

(ஆ) நன்னடத்தை உடையவராயும் ஆரோக்கியம் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தொகுதியில் நிரந்தர வசிப்பாளராக இருத்தல் வேண்டும்.

(ஈ) i. 1925 முதல் 1944 வருடக் காலத்துக்கிடையில் பாடசாலையை விட்டுப் போகும் தராதரப்பத்திர பரீட்சை அல்லது சிங்கள மொழியுடன் கல்வித் திணைக்களத்தின் கனிட்ட தராதரப்பத்திர பரீட்சையிலோ; அல்லது

ii. சிங்கள மொழியுடன் சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திர பரீட்சையிலோ அல்லது அதற்கு உயர்வான பரீட்சை ஒன்றிலோ சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) அரசாங்க கூட்டுத்தாபன அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலோ ஊழியராக இருத்தல் கூடாது.

(ஊ) உள்ளூராட்சி மன்றுகளில் உறுப்பினராக இல்லாமல் இருக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரிகளால் தங்கள் விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிடும் தராதரப்பத்திரங்களின் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப்பத்திரம்

(ஆ) பெற்றுள்ள கல்வித் தகைமைகள் சம்பந்தமான அத்தாட்சிப்பத்திரங்கள்

(இ) அண்மைக்காலத்தில் பெற்றுக் கொண்ட நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டு (இதில் ஒன்று கிராம சேவையாளரிடமிருந்து பெற்றதாக வேண்டும்.)

(ஈ) தொகுதியில் நிரந்தர வசிப்புச் சம்பந்தமாக கிராமசேவையாளரின் உறுதி (மாத்தறை பிரதேச உதவி அரசாங்க அதிபர் மூலம் அனுப்பலாம்.)

4. இதற்கு மேலதிகமாக தங்கள் விண்ணப்பங்களுடன் அவ் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையென்றும் கடன்கள் ஏதும் இல்லையென்றும் சத்தியக் கடதாசியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

5. எல்லா விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தினால் நிரப்பல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படலாம். அதற்காக பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

கார்வின் கருணாரத்ன,
மாத்தறை அரசாங்க அதிபர்.

மாத்தறைக் கச்சேரி,
1972, டிசம்பர் 26 ந் திகதி.

1-334—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42.

---

## கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்

### சிரேட்ட பிரதிக் கணக்காய்வாளர் அதிபதிப் பதவி

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தில் சிரேட்ட பிரதிக் கணக்காய்வாளர் அதிபதிப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் போன்றவற்றில் விண்ணப்பங்கள் எழுதப்பெற்று, கொழும்பு 7 கணக்காய்வாளர் அலுவலகத்திலுள்ள கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பின்வரும் திகதி யில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும்படியாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும் :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1973 பெப்ரவரி 14 ஆந் திகதி ;

(ஆ) கடல்கடந்த நாடுகளிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்கள் : 1973 பெப்ரவரி 21 ஆந் திகதி.

அஞ்சலுறையின் மேற்பக்க இடதுமூலையில் " சிரேட்ட பிரதிக் கணக்காய்வாளர் அதிபதிப் பதவி " எனத் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

**குறிப்பு.—(i)** விண்ணப்பப் படிவம் அஞ்சலில் தாமதமாகிவிட்டது அல்லது தவறிவிட்டது என்ற முறையீடெதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசித் தினங்கள்வரை தங்கள் விண்ணப்பங்களையனுப்பாது தாமதஞ் செய்யும் விண்ணப்பகாரர் அதனால் நேரும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

**(ii)** கடல்கடந்த நாடுகளிலுள்ள விண்ணப்பகாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைக் குறித்த கால எல்லையினுள், அவர்கள் விரும்பும் பட்சத்தில் பிரதம அமைச்சரின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுமுகமாகத் தாம் வதியும் நாட்டிற்கு அல்லது அண்மை நாட்டிற்குக் குறிக்கப்பட்டுள்ள அயல்நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

**(iii) வைத்தியப் பரீட்சைகளும், பயணக் கட்டணங்களும் :** இலங்கைக் குடியரசின்கீழ் நியமனம்பெறுவதற்கு அயல்நாடுகளில் இப் பதவிக்காக தெரிவுசெய்யப்படும் இலங்கை உத்தியோகத்தர்கள், சேவையாற்றுவதற்கான உடல்நலத்தைப் பெற்றுள்ளனராவென்பதை ஆய்ந்தறியுமுகமாக அங்கீகரிக்கப்பட்ட வைத்தியத் தொழில்புரிவோரிடம் வைத்தியப்பரிசோதனையின் பொருட்டுத் தங்களைக் காட்டிக்கொள்ளவேண்டும். அத்தகைய வைத்தியப் பரிசோதனைக்கான கட்டணங்களும் அத்துடன் இலங்கைக்கு வருவதற்கான பயணச் செலவுகளும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களாலேயே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

2. **நியமன நியதிகளும், சேவைநிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. சகாய நிதி அடிப்படையில் பதவி நியமனம் அமைந்திருக்கும். ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவியை, தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர் வகிக்காதிருந்தால் தனது சம்பளத்தின் 6 சதவீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தும்படி வேண்டப்படுவார். அரசாங்க உதவுதொகை சம்பளத்தின் 9 சதவீதமாகவிருக்கும்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர், நியமனத் திகதியில் அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவியை ஏற்கெனவே வகிப்பவராயின் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையில் அவர் தொடர்ந்துமிருப்பார்.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர் ஏற்கெனவே, அரசாங்க சேவையில் இல்லாதிருந்தால், முதலில் மூன்றாண்டுகாலம் தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவியை, தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர் வ ப்பவராயின் அவரது நியமனம் முதலில் ஓராண்டிற்குப் பதிற்கடமையாற்றல் முறையில் அமைந்திருக்கும்.

3. **சம்பளமும், படிகளும்.**—(அ) நிரந்தர அடிப்படையில் ஆண்டிற்கு ரூபா 20,040—2 × 600—21,240 எனும் திரட்டிய சம்பள அளவுத் திட்டத்தில் மணமானவருக்கான படியுடன், அல்லது

(ஆ) கூட்டுத்தாபன உத்தியோகத்தராயின் ஒரு பதவியிலிருந்து இன்னொரு பதவிக்குத் தற்காலிக மாற்றம்பெற்ற நிலையில் அவர்களது கூட்டுத்தாபனச் சம்பளங்களோடு, மற்றுமொரு படியுடன், அல்லது

(இ) ஒப்பந்த உத்தியோகத்தராயின், ஓய்வூதியத்திற்குரித்தற்ற அடிப்படையில் மாதம் 2,000 ரூபா—50—2,500 ரூபாக் கொண்ட சம்பள அளவுத் திட்டத்தில், முதல் தடவையில் ஆண்டு 3 காலத்திற்கு மேற்படாத காலத்திற்கு நியமிக்கப்படுவர்.

**குறிப்பு.**—அவரது தகைமைகளையும், அனுபவத்தையும் பொறுத்து தாபனப் பணிப்பாளருடன் உசாவியபின், மேற்கூறிய சம்பள அளவுத் திட்டத்திற் பொருத்தமானவொரு கட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பகாரர் இப்பதவியில் அமர்த்தப்படுவார்.

4. **தேவையான தகைமைகள்**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தான் பின்வருந் தகைமையுடையவரென்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) நற்குணமுடையவராயும், உடல்நலமுள்ளவராயும் இருத்தல் ;

(ஆ) 1972 டிசெம்பர் 7 ஆந் திகதியில் 45 வயதிற்கு மேற்படாதிருத்தல். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் நியமனங்களைப் பெற்றுள்ள விண்ணப்பகாரர் விடயத்தில் இவ்வயதெல்லை பொருந்தாது) ;

(இ) (i) இலங்கைத் தத்துவம்பெற்ற கணக்காளர் நிலையத்தில் ஒரு துணை நிலை உறுப்பினர் ;

(ii) ஆக்கவிலேயியல், முகாமைக் கணக்காளர் நிலையத்தில் ஒரு துணை நிலை உறுப்பினர் ;

(iii) சான்றுபெற்ற, நிறைகூட்டுடைய கணக்காளர் கழகத்தில் ஒரு துணை நிலை உறுப்பினர் ;

(iv) மேற்கூறிய உயர்தொழில் நிலையங்களில் உறுப்புரிமை பெற்றபின், கணக்கியலில்/நிதிச் செயல் முகாமையில்/ அல்லது கணக்காய்வில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு அனுபவமுடையவராயிருத்தல்.

**குறிப்பு.**—(அ) அரசாங்க சேவையில் (இலங்கைக் கணக்காய்வுச் சேவை உறுப்பினர் அல்லாதோர்) அல்லது கூட்டுத்தாபனச் சேவையில் ஏற்கெனவே பதவிகளை வகிக்கும் விண்ணப்பகாரர் விடயத்தில் அத்தகையோர் பதவிநிலையில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு அனுபவம் உடையவராயின் உயர்தொழில் தகைமைக்குப் பின்னரான தொழிலனுபவம் 8 ஆண்டுகளாயிருக்கும்.

(ஆ) விண்ணப்பகாரர்கள் இலங்கைக் கணக்காய்வுச் சேவை உறுப்பினர்களாகவிருந்தால், கணக்காய்வுத் திணைக்களத்தில் பதவி நிலையில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு அனுபவமுடையவராயின், உயர்தொழில் தகைமைக்குப் பின்னரான தொழிலனுபவம் 6 ஆண்டுகளாகவிருக்கும்.

5. பின்வரும் ஆவணங்களில் எவற்றையுமோ முழுவதையுமோ அவை கோரப்பட்டால் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பகாரர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவிபெற்ற பாடசாலைகளுக்கான பிரமாணக் கோவை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) உயர்தொழில் தகைமைச் சான்றிதழ்களும், பிற தகைமைச் சான்றிதழ்களும் ;

(இ) உயர்தொழில் தகைமைபெற்ற பின்னருள்ள அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (தனியார் துறையில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள விண்ணப்பகாரர் விடயத்தில் மாத்திரமே) ;

(ஈ) இரு நற்குணச் சான்றிதழ்கள் ;

(உ) சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளிற் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைக்கான சான்றிதழ் ;

**குறிப்பு.—(i)** விண்ணப்பப் படிவத்துடன் ஆவணங்களோ, ஆவணங்களின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

**(ii)** கோரப்படும்-த்து ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பகாரரின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

**6.** அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் பிரதியொன்று முடிவு திகதிக்கு முன்னதாகக் கணக்காய்வுத் தலைமையதிபதிக்கு நேரடியாக அனுப்பப்படல்வேண்டும்.

**7.** விண்ணப்பங்களும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் கணக்காய்வுத் தலைமையதிபதிக்கு முகவரியிடப் படவேண்டுமேயொழிய இத்திணைக்களத்திலுள்ள எந்தவொரு உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படலாகாது.

**8.** இவ்வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (II) இன் தொடக்கத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளின்மீது கவனம் கோரப்படுகின்றது.

**9.** விண்ணப்பங்கள் கிடைக்கப்பட்டமை குறித்து முடிவு திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்படும். ஒப்புக்கோடல் கிடைக்காதுபோயின் கொழும்பு 7, கணக்காய்வாளர் தலைமை அலுவலகத்திலுள்ள கணக்காய்வுத்தலைமை அதிபதிக்கு உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்.

பி. எம். டபிள்யூ. விஜயசூரிய,
கணக்காய்வாளர் தலைமையதிபதி.

கணக்காய்வுத்தலைமையதிபதி அலுவலகம்,
கொழும்பு 7, 1973 ந் ௵ ஜனவரி ௴ 3 ந் உ.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்

**சிரேட்ட பிரதிக் கணக்காய்வாளர் அதிபதிப் பதவி**

இலக்கம் :............
(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்தில். குடும்பப் பெயரின் கீழ்க் கீறிடுக)

2. அஞ்சல் முகவரி :————.

3. (அ) பிறந்த திகதி :———— வருடம் :———— மாதம் :————. நாள் :————.

(ஆ) 1972.12.7 ஆந் திகதியன்று வயது :————. வருடங்கள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————.

4. சாதியம் :————.

(அ) வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையா அல்லது பதிவு செய்ததன் மூலம் இலங்கைப் பிரசையா என்ற விபரம் :————.

(ஆ) வம்சாவழி மூலம் இலங்கைப் பிரசையாயின் பின்வருவோர் பிறந்த இடத்தினைக் குறிப்பிடுக :—

(i) விண்ணப்பதாரர் :————.

(ii) விண்ணப்பதாரரின் தந்தை :————.

(iii) விண்ணப்பதாரரின் தந்தைவழி பேரனார் :————.

(iv) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டனார் :————.

5. உயர்கல்வி/கல்வித் தகைமைகள் :————.

| பரீட்சை/பட்டம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| | | |

6. உயர்தொழிற் தகைமைகள் :————.

| விபரம் | தகைமைகளைப் பெற்றுக்கொண்ட திகதிகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

7. தற்போதைய பதவி விபரம் :————.

(அ) பதவி :————.

(ஆ) திணைக்களம்/நிறுவனம் :————.

(இ) நியமனத் திகதி :————.

(ஈ) நியமனம், நிரந்தரமான/ஓய்வூதியத்துக்குரிமையுள்ளதா, தற்காலிகமானதா, ஒப்பந்த அடிப்படையிலானதா ? :————.

(உ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா ? :————.

(ஊ) வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் :————.

(எ) தற்போதைய ஆண்டுச் சம்பளம் :————.

8. தொழிற் தகைமைப்பெற்றபின் ஆற்றிய தொழிற்பற்றிய விவரங்கள் :————.

| பதவியின் தன்மை | திணைக்களம்/நிறுவனம் | தொடக்கம் | வரை | வருடாந்தச் சம்பளம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

9. சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சைத் தரம் :————.
சிங்களம் தமிழ் ஆங்கிலம்

10. நற்சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்கள் :—

(i)

(ii)

11. மற்றைய விபரங்கள் :————

விண்ணப்பப்படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கிறேன் என, இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவுசெய்யப் படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித இழப்பீடுமின்றி வேலைநீக்கஞ் செய்யப் படுவதற்கும் ஆளாகவேண்டுமென்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரராயின், திணைக்களத் தலைவரின் அறிக்கை :

————,
திணைக்களத் தலைவர்/அமைச்சின் தலைவர்

திகதி :————.

1–399—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

**கல்வி அமைச்சு**

பேராதனை ஆசிரியர் கலாசாலை மொழி ஆய்கூடத்திலுள்ள தொழில்நுட்ப

உதவியாளர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள பேராதனை ஆசிரியர் கலாசாலை மொழி ஆய்கூடத்திலுள்ள தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறைக்கமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும். அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) அரசகரும மொழித் தேவைக்கமைய நியமதாரி புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின் தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(iii) அரசினர் சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

(iv) நியமதாரி துவீபத்தின் எப்பகுதியிலேனும் கடமைபுரிய வேண்டும்.

(v) ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பளம் பின்வருமாறுகும் :—

ரூ. 3,864—18/144—6,456. ரூ. 5,304 பெறுமுன் வினைத்திறமை காண் தடை ஒன்றுண்டு.

குறிப்பு.—1.10.69 க்கு முன்னரான இதற்கொத்த சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறுகும் : ரூ. 1,620—120—3,780. ரூ. 2,820 பெறுமுன் வினைத்திறமைகாண் தடை.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரிகள்.—(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 35 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்கலாகாது. (அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் (தூய அல்லது பிரயோக) உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பத்திரப் பரீட்சையில் அல்லது இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் (தூய அல்லது பிரயோக) ஆகிய பாடங்களுடன் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(iv) நாடாப் பதிவு உபகரணங்களைக் கையாளுதலிலும் பொதுப் பேணலிலும் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(v) மின்சார/இலத்திரனியல் உபகரணங்களைப் பழுதுபார்த்தலில் அறிவு/அனுபவம் பெற்றிருப்பதுடன் பரீட்சிக்கும் உபகரணங்களின் உபயோகத்தில் ஆற்றல் பெற்றுமிருக்க வேண்டும்.

**மேலதிகத் தகைமைகள்.**—பின்வருவன போன்ற மேலதிக தகைமைகளைப் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :—

(1) எறிகருவி உபகரணங்களை—விசேடமாக 16 மில்லி மீற்றர் ஒலிச் சலனப் படங்கள் 35 மில்லி மீற்றர் சலனப் படங்கள் தொடர்பானவற்றைக் கையாளுதலில் அனுபவம்.

(2) பல்வேறு வகைப்பட்ட ஒளிப்படம் எடுக்கும் கருவிகளின் உபயோகம், சாதனங்களின் ஒளிப்படிகள் எடுத்தல், ஒளிப்படங்களைப் பெருப்பித்தலுடன் சம்பந்தப்பட்ட இருட்டறை முறைகள்.

5. விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் சாதனங்களில் ஒன்றை அல்லது கூடியவற்றை, வேண்டப்படும் நேரத்தில் சமர்ப்பிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும் :—

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் ;

(ஆ) 4 (iv) ஆம், (v) ஆம் உபபந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தராதரப் பத்திரம் ;

(இ) சிங்களத்தில் சித்தி எய்தியுள்ள ஆகக் கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம் ;

(ஈ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

குறிப்பு.—(1) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படலாகா.

(2) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தம் திணைக்கள/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய விண்ணப்பங்கள் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் உரிய திணைக்கள/நிலையத் தலைவரால் பெறப்பட்டு தாமதத்துக்கான போதிய காரணம் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைவரால் சிபார்சு செய்யப்பட்டாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. இவ்வர்த்தமானியில் I ம் பகுதி, II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றிய அறிவித்தலைப் பெறத் தவறும் விண்ணப்பதாரி ஒருவர் அதனை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடர்பெண் : பொ. நி 20/166.
பொது நிர்வாகக் கிளை,
கலவி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு சனவரி மீ 12 ந் உ.

எண் பொ நி/20/166

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

தொழில்நுட்ப உதவியாளர்—பேராதனை ஆசிரியர் கலாசாலை

மொழி ஆய்கூடம்

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.

2. நிரந்தர தபால் விலாசம் : ————.

3. சொந்த இடம் : ————.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி சரியான வயது : ————.
பிறந்த திகதி : ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரி : ————.

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.

(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் : ————.

7. கல்வித் தகைமைகள் :

(i) பொது : ————.

(ii) உயர்தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் பற்றிய விபரங்கள் : ————.

(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை பற்றிய விபரங்கள் : ————.

8. 4 ஆம் பந்தியின் (iv) ஆம், (v) ஆம் உப-பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை பற்றிய விபரங்கள் :—

| பதவி | சேவை புரிந்த நிலையம் | சேவை புரிந்த காலம் |
| --- | --- | --- |
| | | |

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு : ————.

12. உமக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? : எடுக்கப்பட்டிருப்பின் அது பற்றிய விபரங்கள் : ————.

13. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின் :—

(அ) படைக்கூற்றின் பெயர் : ————.

(ஆ) வகித்த பதவி : ————.

(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

14. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் பற்றிய விபரங்கள் : —

(அ) வகித்த பதவிகள் : ————.

(ஆ) சேவை புரிந்த காலம் : ————.

(இ) விலகியதற்கான காரணம் : ————.

**15. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.**

16. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—

(1) நிலையத்தின் பெயர் : ————.

(2) பதவியும் அதன் தரமும் : ————.

(3) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ————.

(4) நியமனம் உபகாரச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா : ————.

(5) சகாயப்படிகள் நீங்கலாக தற்போதைய சம்பளமும் சம்பள விகிதமும் : ————.

(6) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்பட்டதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

**பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

உங்கள் எண் : பொ. நி/20/166

எனது எண் :

செயலாளர்,
கல்வி அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின் முன்/பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

..........இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை*. விண்ணப்பம் இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

...........................................,
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.

திகதி : ————.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

1-342—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

**பாற் சபை**

**தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள்—தரம் V.**

சபையின் சேவையிலுள்ள மேற்குறித்த பதவிக்கு ஸ்ரீலங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்திலேயே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 1973.02.03 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கும்படியாக அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பளம் :** ரூபா 600–8 × 25–ரூபா 800 – மாதாந்தம் (எல்லாம் உட்பட).

3. **தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(அ) 1973.02.03 அன்று 25 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளார்.

(ஆ) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(இ) (i) பொறியியல் அல்லது மின்னியலுக்குரிய எந்திரவியலில் தகுதித் தேர்வுப் பத்திரம் உடையவர்.; அல்லது

(ii) கனிஷ்ட பொறியியல் அலுவலர்கள் பயிற்சிநெறி 1 ம், 2 ம் பகுதிகள் ; அல்லது

(iii) எந்திரவியல் தொழில் பயில்வோர் நாட்பயிற்சி நெறி 1 ம் 2 ம் பகுதிகள் ; அல்லது

(iv) மேற்குறித்த பதவிகளுடனொத்த தகுதிகள் உடையவர் ; அத்துடன்

(1) குறைந்தது மூன்று வருட செயல்முறை அநுபவம் பொறிமுறையும்/அல்லது குளிரேற்றுதல் எந்திரவியலிலும்.

(2) பொறியியலும்/அல்லது குளிரேற்றுதல் எந்திரவியல் வேலையில் மேற்பார்வையாளர் தரத்தில் குறைந்தது ஒருவருட அநுபவம்.

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலையில் வேலை பார்த்த அபேட்சகர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். கீழ்க்கண்ட துறைகளில் ஒன்றிலாவது அநுபவம் இருப்பின் சிறப்பாகக் கருதப்படும்.

(அ) கொதி கலன்கள்.

(ஆ) குளிரேற்றும் பொறிகள்.

(இ) மின் மோட்டாரும், தொடக்குதல்களும் 50 கு. ச. வரை.

(ஈ) பம்பி.

(உ) பாரமான பொறியியல் பொறிகள்.

4. **சேவை நிபந்தனைகள் :**—(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48 அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். இணைக்கள கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள்யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்கவே கவனிக்கப்படும். இணைக்கள அல்லது கூட்டுத்

தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர்கள் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப் பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

5. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் சகாய நிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

6. **பிணை.**—தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் பிணை கட்டுமாறு வேண்டப்படுவர்.

7. **மருத்துவச் சோதனை.**—நியமனம் பெறுபவர்கள் பதவியேற்கு முன்பு அரசாங்க மருத்துவ ஸ்தாபனமொன்றன் மருத்துவச் சோதனையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பி. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(ஆ) மிகக் கூடிய கல்வித் தகைமை உயர் தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு, இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

9. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், பாற்சபை என்ற விலாசத்திற்கன்றிச் சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக் கூடாது.

தலைவர்
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. எண் 1155,
நாராஹேன்பிற்ற,
கொழும்பு 5.

**விண்ணப்பப் படிவம்**

தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள் தரம் V.

1. முழுப் பெயர் :————.
2. தனிப்பட்ட முகவரி :————.
3. விண்ணப்பதாரரின் பிறந்ததிகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
4. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறப்பிடம் :————.
5. உயர்கல்வி தொழில் தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

| பரீசையின் பெயர் | சித்தியெய்திய வருடம் | சித்தியெய்திய பாடங்களின் விபரங்கள் |
| --- | --- | --- |

6. சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் அறிவு :————.
7. முன் அநுபவ விபரங்கள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

| வேலை செய்த நிறுவனத்தின் பெயர் | பதவி | வேலை செய்த காலம் தொடக்கம் முடிவு |
| --- | --- | --- |

8. தற்போதைய உத்தியோக விபரங்கள் :————.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

1-381—12.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 42

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினுல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | 5. 1.73 | வெள்ளி | .. | 27.12.72 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 12. 1.73 | வெள்ளி | .. | 3. 1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19. 1.73 | வெள்ளி | .. | 10. 1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 26. 1.73 | வெள்ளி | .. | 17. 1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** | .. | 2. 2.73 | வெள்ளி | .. | 24. 1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9. 2.73 | வெள்ளி | .. | 31. 1.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 15. 2.73 | வியாழன் | .. | 7. 2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23. 2.73 | வெள்ளி | .. | 14. 2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **மாச்சு** | .. | 2. 3.73 | வெள்ளி | .. | 21. 2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 9. 3.73 | வெள்ளி | .. | 28. 2.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 16. 3.73 | வெள்ளி | .. | 7. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 23. 3.73 | வெள்ளி | .. | 14. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 30. 3.73 | வெள்ளி | .. | 21. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| **எப்பிறல்** | .. | 6. 4.73 | வெள்ளி | .. | 28. 3.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 11. 4.73 | புதன் | .. | 4. 4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 19. 4.73 | வியாழன் | .. | 11. 4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |
| | | 27. 4.73 | வெள்ளி | .. | 18. 4.73 | புதன் | .. | ந.ப. 12.00 |

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ ஓகஸ்து மீ 18 ந் உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.